# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 11,668 — 1959 පෙබරවාරි 18 වැනි බදාදා — 18.2.1959

11,668 ம் இலக்கம் — 1959 ம் ஆண்டு மாசி மாதம் 18 ந் திகதி புதன்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

### விலைக் கட்டளைகள்

உணவு விலைக் கட்டளை இல. ஜே./13/1959. உப உணவுப் பொருட்கள்.

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம், 3 (2) ம் பிரிவுகளினால் விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு, உதவி விலைக்கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு), செல்லையா நிற்குணனந்தன் ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதியைக் கொண்ட 11,525 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ந் திகதியைக் கொண்ட ஜே./7/1958 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் இறக்குமதியாளரின் ஆகக்கூடிய மொத்த விலை, மொத்த வியாபாரியின் ஆகக்கூடிய மொத்தவிலை, சில்லறை வியாபாரியின் ஆகக்கூடிய சில்லறைவிலை முதலியவற்றைப் பொறுத்தமட்டில் குறித்த அட்டவணையில் முறையே 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையும் 1 ம் பத்தியில் குறிப்பிட்டுள்ள மாசிக் கருவாடு பற்றிய எனது விலைக் கட்டளையையும் இத்திகதியிலிருந்து எடுத்துவிடுகிறேன் ;

(2) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே நிகர அந்தர் ஒன்றின் மொத்த வியாபாரியின் ஆகக் கூடிய மொத்த விற்பனை விலையாகவும், நிகர இருத்தல் ஒன்றைச் சில்லறை வியாபாரி ஒருவர் பாவிப்பாளர் ஒருவருக்கு விற்கும் ஆகக்கூடிய சில்லறை விலையாகவும் குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட பொருளை இந்த விலைக்குக் கூடுதலாக யாழ்ப்பாணப் பிரிவுக் காரியாதிகாரியின் எல்லைக்குள் (யாழ்ப்பாண நகர சங்க எல்லையுள்பட) விற்றலாகாது ;

(3) 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ந் திகதியைக் கொண்ட 11,525 ம் இலக்க இலங்கை அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில், 1958 ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 10 ந் திகதியைக் கொண்ட ஜே./7/1958 ம் இலக்கமுள்ள உணவு விலைக் கட்டளையில் 3 ம், 9 ம் பத்திகளின் கட்டளையாலும், இதனோடு சேர்க்கப்பட்டிருக்கும் 2 ம் அட்டவணையாலும் 1 ம் பத்தியில் குறிக்கப்பட்ட மாசிக் கருவாட்டு விலைக்குப் பொருந்தும் ; ஆனாலும் அந்தப் பத்திகளும் அந்த அட்டவணையும் இக்கட்டளையிலிருந்து பிரிவுபடாதிருக்கும்.

யாழ்ப்பாணக் கச்சேரியில் 1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ந் திகதி, முற்பகல் 9.50 மணிக்குக் கையொப்பமிடப்பட்டது.

செ. நிற்குணனந்தன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரி (உணவு),
யாழ்ப்பாண மாவட்டம்.

அட்டவணை

| பத்தி 1<br>விபரம் | பத்தி 2<br>மொத்த வியாபாரியின் நிகர அந்தர் ஒன்றின் ஆகக்கூடிய மொத்த விற்பனை விலை<br>ரூ. ச. | பத்தி 3<br>சில்லறை வியாபாரியின் நிகர இருத்தல் ஒன்றின் ஆகக்கூடிய விற்பனை விலை<br>ரூ. ச. |
|---|---|---|
| மாசிக் கருவாடு (எல்லா இரகங்களும்) .. | 243 85 .. | 2 43 |

குறிப்பு.—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருளை விற்கவேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இது ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக அப்பொருளை விற்றலாகாது.

உணவு விலைக் கட்டளை இல. J./15/1959. ஆட்டிறைச்சி.

## 1950 ம் ஆண்டின் 29ம் இலக்க விலைக் கட்டுப்பாட்டுச் சட்டம்

### கட்டளை

1950 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 4 ம், 3 (2) ம் பிரிவுகளினால், உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரிக்கு (உணவு), அளிக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு செல்லையா நிற்குணனந்தன் உதவி விலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) ஆகிய நான் இக்கட்டளையால்—

(1) இதனோடிருக்கும் அட்டவணையின் 2 ம், 3 ம், 4 ம், 5 ம் பத்திகளில் விபரிக்கப்பட்டிருக்கும் விலைகளையே முறையே ஒரு இருத்தலுக்கு ஆகக்கூடிய விலையாக உடனடியாக நடைமுறையில் வருமாறு விதிக்கிறேன். குறித்த அட்டவணையின் 1 ம் பத்தியில் நேரொத்த பதிவில் விபரிக்கப்பட்ட இவ்விலைகளுக்குக் கூடுதலாக அட்டவணையின் தலைப்பில் குறிக்கப்பட்டிருக்கும் இடங்களுக்குள் விற்க லாகாது.

(2) இக்கட்டளையின் நோக்கத்துக்காக—

(அ) ஆட்டிறைச்சி என்றால், செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் மாமிசத்தைக் குறிப்பதாகும். எல்லாவிதக் கழிவுகளும் தவிர்ந்ததுமாகும் ;

(ஆ) விற்பனைக்குத் தயாராக ஆடடிக்கும் தொட்டிலில் இருந்து செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் சடலம் (தலை, குடல், குளம்புகள்), மற்றும் எல்லாவிதமான வழமையாகக் கழிக்கப்படுபவைகள் தவிர்ந்த மற்றவை விற்பனை செய்யப்பட்டால் அது "உயிரற்ற நிறையாக" கருதப்படும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் ;

(இ) "ஈரல்" என்பது செம்மறி ஆட்டின் அல்லது வெள்ளாட்டின் ஈரலைக் குறிப்பதாகும் ;

(3) ஆட்டிறைச்சி எலும்புகள் விற்கப்படுமிடத்து, எலும்புகளின் நிறை மொத்தமாக விற்கப்படும் நிறையின் 25 சத வீதத்துக்கு மேற்பட லாகாது என்றும் ஆஞ்ஞையிடுகிறேன்.

(4) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும் தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சியை தம் வசத்தில் அல்லது தமது கட்டுப்பாட்டில் எவ்விடத்திலாவது, வாகனத்திலாவது, பாத்திரத்திலாவது வைத்திருக்கும் ஒவ்வொரு வியாபாரியும், அவ்விடத்தில், அவ்வாகனத்தில் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும், தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சிக்கு இக்கட்டளையால் விதிக்கப்பட்ட ஆக்கக்கூடிய விலைகளைக் காட்டும் அறிவித்தல் ஒன்றைப் பகிரங்கமாகப் பார்வைக்கு வைக்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(5) ஆட்டிறைச்சியுடன் கழிவுகளும் விற்கப்படின், ஆட்டிறைச்சிக் கழிவுகளில் இருந்து வேறாக நிறுத்து விற்கப்படல் வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(6) ஒவ்வொரு வியாபாரியும் ஆட்டிறைச்சியோ அல்லது ஈரலோ விற்கும்பொழுது தன்னுடைய நிறுக்கும் தராசையோ, தராசுகளையோ, ஆட்டிறைச்சி அல்லது ஈரல் வாங்குபவர் தாம் வாங்கும் உண்மையான நிறையைப் பார்க்கக்கூடிய இடத்தில் வைத்தல் வேண்டு மென ஆஞ்ஞையிடுகிறேன்.

(7) அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விபரத்தையும், தரத்தையும் கொண்ட ஆட்டிறைச்சியை அல்லது ஈரலை விற்கும் ஒவ்வொரு வியாபாரியும், ஆட்டிறைச்சியை வாங்குவோர் கேட்குமிடத்து, அன்றிருக்கும் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுப் பற்றுச் சீட்டு ஒன்று கொடுத்தல் வேண்டும் என்று ஆஞ்ஞையிடுகிறேன் :—

(அ) விற்பனை நடந்த திகதி ;
(ஆ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சி அல்லது ஈரல் அளவு (நிறையில்) ;
(இ) விற்பனை செய்யப்பட்ட ஆட்டிறைச்சி அல்லது ஈரல் விபரம் ;
(ஈ) விற்கப்பட்ட ஆட்டிறைச்சியின் அல்லது ஈரலின் அளவுக்குக் கொடுக்கப்பட்ட விலை.

(8) இக்கட்டளையினால் ஆகக்கூடிய விலை நிர்ணயிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு இடத்திலும், அட்டவணையில் குறிப்பிட்டுள்ள பொருளை வேறு எந்த இறைச்சியுடனும், மாமிசத்துடனும் கலந்து விற்கல் ஆகாது என ஆஞ்ஞையிடுகிறேன்.

(9) குறித்த அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள பொருள் விற்குமிடத்து அட்டவணையின் 2, 3, 4, 5 ம் பத்திகளில் குறிப்பிட்டுள்ள ஆகக்கூடிய விலைகளில் அவ்வாறு விற்கப்படும் பொருளைச் சுற்றிக் கொடுக்கும் கடுதாசி அல்லது கொள்கலம் ஏதாவது உபயோ கிக்கப்படின் அதன் விலையும் அடங்க வேண்டுமென ஆஞ்ஞையிடுகிறேன்.

(10) இக்கட்டளையின் நோக்கத்துக்காக "இருத்தல்" என்பது "அவோர்டுபோஸ்" எடுத்தல் அளவை முறையின் பிரமாண இருத்தல் முறையாகக் கருதப்படுமென்று ஆஞ்ஞையிடுகிறேன்.

1959 ம் ஆண்டு பெப்ருவரி மாதம் 14 ந் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ்ப்பாணக் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

செ. நிற்குணனந்தன்,
உதவி விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி (உணவு).

### அட்டவணை

ஆட்டிறைச்சியினதும் ஈரலினதும் ஆகக்கூடிய விலைகள்

| பத்தி 1 | பத்தி 2 | பத்தி 3 | பத்தி 4 | பத்தி 5 |
|---|---|---|---|---|
| இடம் | ஆட்டிறைச்சி (எலும்பு இல்லாமல்) ஒரு இருத்தல் ஆகக் கூடிய விலை | ஆட்டிறைச்சி எலும்புடன் ஒரு இரு. ஆகக்கூடிய விலை | ஆட்டிறைச்சி (உயிரற்ற நிறை) ஒரு இருத்தல் ஆகக்கூடிய விலை | செம்மறி அல்லது ஆட்டு ஈரல் ஒரு இருத்தல் ஆகக் கூடிய விலை |
| | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. | ரூ. ச. |
| யாழ்ப்பாணம் நகர எல்லைக்குள் | 2 25 | 2 0 | 1 70 | 3 0 |
| யாழ்ப்பாண நகரசங்க எல்லை தவிர்ந்த யாழ்ப்பாண மாவட்டம் | 2 15 | 1 90 | 1 60 | 2 90 |

**குறிப்பு.**—இவ்விலைகள் மேலே சொல்லப்பட்ட பொருட்களை விற்க வேண்டுமென விதிக்கப்பட்ட விலைகளல்ல ; இவை ஆகக்கூடிய விலைகளாகும். இவ்விலைகளுக்கு மேலாக இப்பொருள்களை விற்கலாகாது.

இலங்கை அரசாங்க அச்சகத்திற் பதிப்பிக்கப்பெற்றது